DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the court Judicial Magistrate At Oddanchatram

Case No : STC 21/2021

Prosecution Witness : PW1

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | சிவச்சந்திரன் | ஜாதி: | |
| தந்தை / கணவர் பெயர் : | சக்திவேல் முருகன் | தொழில்: | |
| கிராமம்: | | சமயம்: | |
| தாலுகா: | | வயது | |

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act 1969

Examination Date / சாட்சி விசாரணை தேதி :- 22/07/2026

(2வது எதிரி ஆஜர் .)

**அரசு தரப்பில் முதல் விசாரணை :**

நான் தற்போது மதுரை மாவட்டம், உசிலம்பட்டி உணவு பாதுகாப்பு அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். நான் தொப்பம்பட்டி வட்டாரத்தில் உணவு பாதுகாப்பு அலுவலராக பணிபுரிந்தபோது கடந்த 09.10.2018 ஆம் தேதி தொப்பட்டி வட்டாரத்திற்கு உட்பட்ட கள்ளிமந்தையம் ஸ்ரீகிருஷ்ண ஸ்வீட்ஸ் மற்றும் பேக்ஸ் என்னும் இனிப்பு கார வகைகளை விற்பனை செய்யும் கடையை பகல் 2.00 மணிக்கு ஆய்வு செய்ததை 1வது எதிரியிடம் தொப்பம்பட்டி உணவு பாதுகாப்பு அலுவலர் என்று அறிமுகம் செய்து மேற்படி கடையை ஆய்வு செய்ய வேண்டும் என்று கூறி 1வது எதிரியும் சம்மதிக்கவே ஆய்வில் கடையானது உணவு வணிகத்திற்கான உரிமம் பெறப்பட்டுள்ளது. **மேற்படி கடையின் உரிமம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** மேற்படி கடையில் பொது மக்களிடம் விற்பனை செய்வதற்காக வைக்கப்பட்டு இருந்த உணவு பொருட்களை ஆய்வு செய்தபோது அங்கு வைக்கப்பட்டு இருந்த Andhra முறுக்கு உதரியாக என்னும் உணவு பொருளை உணவு மாதிரி எடுத்து பகுப்பாய்விற்கு அனுப்ப வேண்டும் என்று கூறவே அவர் சம்மததித்தார். **மேற்படி சம்மதத்திற்கான 1வது எதிரியின் வாக்குமூலம் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** அப்போது அங்கு இருந்த வி.எஸ்.சோமசுந்தரம் என்பவரை சாட்சியாக இருக்க கேட்டுக் கொண்டு அவரும் சம்மதித்து 1வது எதிரியிடம் உணவு மாதிரி எடுப்பதற்கான படிவம் V-A ஐ பூர்த்தி செய்து எதிரியிடம் கையெழுத்து பெற்று சாட்சியிடம் கையொப்பம் பெற்று மேற்படி படிவம் V-A-வின் ஒரு நகலை எதிரிக்கு வழங்கினேன். **மேற்படி படிவம் V-A அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்பு 2 கிலோ Andhra முறுக்கு உதரியாக கிரைய தொகை ரூ.400 ரொக்கமாக செலுத்தி வாங்கினேன். **மேற்படி ரூ.400க்கான ரசீது அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் ரொக்கத்திற்கு வாங்கிய மேற்படி 2 கிலோ Andhra முறுக்கினை உதிரியாக 500 கிராம் வீதமாக சமமாக நான்காக பிரித்து

தனித்தனியே தடித்த உறுதியான காகித்தால் நன்கு சுற்றி முனைகளை உட்புறமாக மடித்து பசையினால் ஒட்டி உணவு பாதுகாப்பு மற்றும் தரங்கள் சட்டத்தின் படி அதன் மேல் லேபிள் தயார் செய்து ஒட்டி, அதன் பின் லேபிள்களில் எதிரியின் கையொப்பம் பெற்று ஒவ்வொரு உணவு மாதிரி மீதும் ஒட்டிய பின்பு நான்கு உணவு மாதிரிகளையும் தனித்தனியாக தடித்த காகிதத்தால் சுற்றி முனைகளை மடித்து பசையினால் ஒட்டி திண்டுக்கல் நியமன அலுவலரின் கையொப்பம் இட்ட 24/006/051/291/2019 – 2020 வரிசை எண் கொண்ட நான்கு பேப்பர் சிலிப்புகளை நன்றாக பசை தடவி ஒவ்வொரு மாதிரியின் மீதும் கீழ் இருந்து மேலாக வரும்படி முழுவதுமாக சுற்றி ஒட்டினேன்.பின்பு மேற்படி 1வது எதிரியின் கையொப்பம் பேப்பர் சிலிப்பிலும், காகிதத்திலும் படும்படியாக நான்கு உணவு மாதிரிகளிலும் மேற்படி எதிரியின் கையொப்பம் பெற்று, பின்னர் நான்கு உணவு மாதிரிகளையும் தனித்தனியாக உறுதியாக டுவைன் நூலினால் கீழ் இருந்து மேலாகவும், குறுக்கு வாக்கிலும் சுற்றி கட்டி அதன் நான்கு பக்கமும் அரக்கு வைத்து அதில் உணவு பாதுகாப்பு அலுவலரின் மாதிரி சிலிப் பதித்தேன். பின்பு உணவு மாதிரியின் ஒரு பாகத்தை NABL லேப் –க்கு அனுப்ப விருப்பம் உள்ளதா என்று 1வது எதிரியிடம் கேட்டதற்கு அதற்கு அவர் விருப்பம் இல்லை என்று தெரிவித்தால் விருப்பம் இல்லை என்பதற்கான கடிதத்தை அவரிடம் பெற்றுக் கொண்டு அதில் சாட்சியிடமும் கையொப்பம் பெற்றேன். **மேற்படி கடிதம் அ.சா.ஆ. 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்பு தனியாக படிவம் VI ஒரு பிரதியும், மாதிரி சீல் இட்ட படிவம் ஒரு பிரதியும் வைத்து நியமன அலுவலரிடம் 09.10.2018 ஆம் தேதி தகவல் தெரிவித்து அன்றைய தினமே பாளையங்கோட்டை உணவு பகுப்பாய்விற்கு கொரியர் சர்வீஸ் மூலம் அனுப்பி வைத்தேன். **மேற்படி படிவம் VI அ.சா.ஆ.6 ஆகவும், மாதிரி அலுவலக அரக்கு முத்திரை தாள் ஆவணம் அ.சா.ஆ.7 ஆகவும், 09.10.2018 ஆம் தேதி நியமன அலுவலருக்கு தகவல் தெரிவித்த ஆவணம் அ.சா.ஆ.8 ஆகவும், உணவு பகுப்பாய்வு அலவலுக்கு கொரியர் சர்வீஸ் மூலம் அனுப்பப்பட்ட ஆவணம் அ.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகின்றன். பின்பு பூர்த்தி செய்யப்பட்ட படிவம் –VI – ன் ஒரு பிரதியும், மாதிரி சீல் இட்ட ஒருபிரதியும், தனியாக ஒரு கவரில் வைத்து பாளையங்கோட்டை உணவு பகுப்பாய்வாளருக்கு கொரியர் சர்வீஸ் மூலம் அனுப்பி வைத்தேன். மேற்படி ஆவணம் அ.சா.ஆ.10 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** மீதமுள்ள 3 உணவு மாதிரிகளை படிவம் –VI மூன்று பிரதிகள் மற்றும் 6 சீலிட்ட படிவம் மாதிரி பிரதிகளுடன் இணைத்து 09.10.2018 ஆம் தேதி நியமன அலுவலரிடம் நேரடியாக ஒப்படைத்து அதற்கான ஒப்புதல் பெற்றுக் கொண்டேன். மேற்படி ஒப்புதல் ரசீது அ.சா.ஆ.11 ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் மேற்படி கடையின் உரிமையாளர் ரமேஷ் என்பதால் அவர்களுக்கும் அவரது கடையின் உணவு மாதிரிகளை எடுத்த விவரத்தை தகவல் தெரிவிக்க படிவம் –V–A கொரியர் சர்வீஸ் மூலமாக அனுப்பி வைத்தேன். **படிவம் –V–A அ.சா.ஆ.12 ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி கொரியர் சர்வீஸ் மூலம் அனுப்பி வைத்ததற்கான ஆவணம் அ.சா.ஆ.13 ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி உணவு மாதிரியை பகுப்பாய்வு செய்வதற்கு காலதாதம் என்ற உணவு பகுப்பாய்வாளரின் கடிதம் அ.சா.ஆ.14 ஆக குறியீடு செய்யப்படுகிறது. 16.10.2018 ஆம் தேதி நியமன அலுவலரால் பெறப்பட்டது. இந்நிலையில் மேற்படி உணவு மாதிரியானது பாதுகாப்பற்றது என பரிசோதனை முடிவு படிவம் B– அ.சா.ஆ.15 ஆகவும், அறிக்கையாக 23.04.2019 ஆம்**

**தேதி நியமன அலுவலரால் பெறப்பட்டு 1வது எதிரிக்கு இவ்வறிக்கையின் நகல் அ.சா.ஆ.16 ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி உணவு மாதிரியினை மறுபகுப்பாய்வு செய்ய தாங்கள் விருப்பப்பட்டால் உயர் பரிசோதனைக்கூடத்திற்கு அனுப்பலாம் என்ற கடிதம் அ.சா.ஆ.17 ஆகவும், 02.05.2019 ஆம் தேதி நியமன அலுவலரால் பதிவஞ்சல் மூலமாக அனுப்பப்பட்டது. மேற்படி பதிவஞ்சல் ஆவணம் அ.சா.ஆ.18 ஆகவும், பின்பு 2வது எதிரிக்கு இவ்வறிக்கையின் நகலும், உணவு மாதிரியினை பகுப்பாய்வு செய்ய தாங்கள் விருப்பப்பட்டால் உயர் பரிசோதனைக்கூடத்திற்கு அனுப்பலாம் என்ற கடிதத்தையும், 02.05.2019 ஆம் தேதியன்று நியமன அலுவலரால் பதிவஞ்சல் மூலமாக அனுப்பப்பட்டது. 2வது எதிரிக்கு அனுப்பப்பட்ட அறிக்கையின் நகல் அ.சா.ஆ.19 ஆகவும், உயர் பரிசோதனை கூடத்திற்கு அனுப்பலாம் என்ற கடிதம் அ.சா.ஆ.20 ஆகவும், பதிவஞ்சல் ஆவணம் அ.சா.ஆ.21 ஆகவும் குறியீடு செய்யப்படுகின்றன.** மேற்படி எதிரிகள் உணவு மாதிரியை மறு பகுப்பாய்வுக்காக அனுப்புவது குறித்து மேல்முறையீடு எதுவும் தாக்கல் செய்யவில்லை. மேலே சொல்லப்பட்ட உணவு மாதிரி பாதுகாப்பற்றது என உணவு பகுப்பாய்வு அலுவலரால் உரிய பரிசோதனை மூலம் கண்டறியப்பட்டு அறிக்கையாக பெறப்பட்டது.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

இல்லை.

Signature of the witness
(சாட்சியின் கையெழுத்து)

Taken Down by me in Open Court and Read Over to the witness in the presence of the accused interpreted to him in Tamil and admitted by him/her to be correct.

PRAVEENA SUBBARAYAN
Digitally signed by PRAVEENA SUBBARAYAN
Date: 2026.07.22 17:29:24 +0530

Judicial Magistrate
Oddanchatram.
Date : 22/07/2026

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the court Judicial Magistrate At Oddanchatram

Case No : STC 21/2021

Prosecution Witness : PW2

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | மோகனரங்கம் | ஜாதி: | |
| தந்தை / கணவர் பெயர் : | கருப்பையா | தொழில்: | |
| கிராமம்: | | சமயம்: | |
| தாலுகா: | | வயது | |

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act 1969

Examination Date / சாட்சி விசாரணை தேதி :- 22/07/2026

(எதிரி ஆஜர் .)

**அரசு தரப்பில் முதல் விசாரணை :**

நான் தற்போது உடுமலைப்பேட்டை வட்டார உணவு பாதுகாப்பு அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். நான் தொப்பம்பட்டி வட்டாரத்தில் உணவு பாதுகாப்பு அலுவலராக பணிபுரிந்தபோது எனக்கு முன்பாக மேற்படி தொப்பம்பட்டி வட்டார பகுதியின் உணவு பாதுகாப்பு அலுவலராக பணியாற்றிய திரு. சிவசந்திரன் அவர்கள் எதிரிகளின் மீது எடுத்து வைத்து இருந்த நடவடிக்கைகள் சம்பந்தமாக மேற்படி சிவசந்திரன் எனக்கு கிடைக்க செய்த அவரது அறிக்கை தொடர்ச்சியாக நான் எடுத்துள்ள நடவடிக்கைளையும், புகாரினையும் மாண்பமை நீதிமன்றத்தில் சமர்ப்பித்தேன். மேற்படி 1வது எதிரி பாதுகாப்பற்றது என பகுப்பாய்வின் மூலம் கண்டறியப்பட்டுள்ள உணவு பொருளை சட்டத்திற்கு புறம்பாக பொதுமக்களுக்கு அவர்களின் நுகர்வுக்காக விற்பனை செய்துள்ள குற்றத்தை செய்துள்ளார். குற்றச்செயல் நடைபெற்ற வருகின்ற மேற்படி கடையின் உரிமையாளராக தொடர்ந்து இருந்து வருகிற குற்றத்தை ரமேஷ் என்னும் 2வது எதிரி செய்துள்ளார் என்றும், மேற்படி எதிரிகளின் செய்கையானது உணவு பாதுகாப்பு மற்றும் தரங்கள் சட்டம் 2006 பிரிவு 59(i) தண்டனைக்குரிய குற்றங்கள் ஆகும். **மேலும் எதிரிகள் மீது மேற்சொன்ன சட்டவிதிகளை மீறியதற்காக அவர்கள் மீது குற்றவியல் வழக்கு தொடர அனுமதி கோரி 02.05.2019 ஆம் தேதி ஆணையர் அவர்களுக்கு பரிந்துரை செய்தோம். மேற்படி பரிந்துரை செய்த அறிக்கை அ.சா.ஆ.22 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** ஆணையாளர் அவர்களின் 18.12.2020 ஆம் தேதியிட்ட ஆணையினை 29.12.2020 ஆம் தேதி பெற்றதின் அடிப்படையில் மேற்படி எதிரிகளுக்கு எதிராக இதன் மூலம் புகாராக நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேன். **மேற்படி ஆணையாளர் அவர்களின் ஆணை அ.சா.ஆ.23 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

**இல்லை.**

Taken Down by me in Open Court and Read Over to the witness in the presence of the accused interpreted to him in Tamil and admitted by him/her to be correct.

Signature of the witness
(சாட்சியின் கையெழுத்து)

PRAVEENA SUBBARAYAN

Digitally signed by PRAVEENA SUBBARAYAN
Date: 2026.07.22 17:29:30 +0530

Judicial Magistrate
Oddanchatram.
Date : 22/07/2026